# இயேசுவின் தொனி

## தீர்க்கதரிசன மாத இதழ்

மலர் : 01 அக்டோபர்-2025 இதழ்:03



# தீர்க்கதரிசனத்தின் நோக்கங்கள்

தீர்க்கதரிசன சிறப்புக் கட்டுரை



# ஆசிரியர் பக்கம்



**கிறிஸ்துவில் பிரியமானவர்களுக்கு,**

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் யாவருக்கும் என் அன்பின் நல்வாழ்த்துக்கள்.

இந்த மாதமும் பத்திரிகையின் வழியாக உங்களை சந்திப்பதில் கர்த்தருக்குள் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். கடந்த மாதம் நாம் செய்த எல்லா ஊழியங்களையும் தேவன் அளவில்லாமல் ஆசீர்வதித்தார். நாட்கள் மிக வேகமாக ஓடுவதைப் பார்க்கிறோம். இந்த வருடம் இப்பொழுது தான் ஆரம்பித்ததைப்போல இருக்கிறது, பத்தாவது மாதத்திற்குள் வந்துவிட்டோம். இன்றுவரை தேவன் தமது கிருபையினால் நம்மை பாதுகாத்து நடத்தி வருகிறார்.

தேவ பிள்ளைகளான நாம் காலங்களை விரயமாக்கிவிடாதபடி காலங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்துகொள்ள வேண்டும். நாட்கள் பொல்லாதவைகளாய் மாறிக் கொண்டே வருகிறதைப் பார்க்கும்போது நாம் காலங்களை பிரயோஜனப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது நன்றாகப் புரிகிறது.

இந்தக் கடைசி நாட்களில் உலகமெங்கிலும் ஒரு மரண அலை சூழ்ந்துகொண்டே வருவதைப் பார்க்கிறோம். எங்கு பார்த்தாலும் கொத்து கொத்தாக ஜனங்கள் மரிக்கின்ற செய்தியை நாள்தோறும் கேள்விப்படுகிறோம். இப்படிப்பட்ட செய்திகளை கேள்விப்படுகிறதோடு நிறுத்திவிடாமல் தேவ பிள்ளைகள் இதற்காக மன்றாடி பாரப்பட்டு திறப்பில் இன்று கருத்தாக ஜெபிக்க வேண்டும். ஜெபம் ஒன்று தான் கடைசிக்கால அழிவுகளிலிருந்தும், தீமைகளிலிருந்தும் நம்மையும், தேசத்தையும் பாதுகாக்கிற ஆயுதம்.

ஜெபத்தினால் தீமைகளை தடுக்கவும், குறைக்கவும் அதிகாரத்தை தேவன் நமக்கு கொடுத்திருப்பதால் நாம் அமரிக்கையாக இருக்கக்கூடாது. நாட்கள் கொடியதாய் மாறி இருளின் அதிகாரம் பெருகிக் கொண்டேவருவதைப் பார்க்கும்போது உங்கள் ஜெபத்தை இன்னும் தீவிரப்படுத்த வேண்டும். விழித்திருந்தும், இடைவிடாமல் ஜெபிக்கிறவர்களாக மாற வேண்டும்.

கடந்த மாதம் இராமநாதபுரத்திலுள்ள நம்முடைய தீர்க்கதரிசன மையத்தில் நடைபெற்ற உபவாச ஜெபம் காத்திருப்பு கூடுகையாக நடைபெற்றது. கர்த்தர் மகிமையான காரியங்களைச் செய்தார். அதைக் குறித்த செய்தியும், அறிக்கையும், கலந்து கொண்ட ஜனங்கள் பெற்றுக்கொண்ட ஆவிக்குரிய அனுபவங்களின் சிலவற்றையும் இந்தப் பத்திரிகையில் பிரசுரித்திருக்கிறோம். உங்கள் ஜெப தேவைகளுக்காக அல்லது வேறு தகவல்களைப் பெற விரும்பினால் எங்கள் அலுவலகத்தை தொடர்பு கொள்ளுங்கள். கர்த்தர்தாமே உங்களை ஆசீர்வதித்து காப்பாராக, ஆமென்.!

**கிறிஸ்துவின் பணியில்,**

**சகோ. வின்சென்ட் செல்வகுமார்**

***VOICE OF JESUS MINISTRIES***
***P.O.BOX : 23, RAMANATHAPURAM***
***623501, TAMILNADU, S. INDIA***
***CONTACT : (+91) 9788 404 333***

# தீர்க்கதரிசனத்தின் நோக்கங்கள்



**தீர்க்கதரிசன செய்தி**

**சகோ. வின்சென்ட் செல்வகுமார்**

கர்த்தர் தாம் செய்யப்போவதை மனிதர்களுக்கு முன் கூட்டியே வெளிப்படுத்திச் சொல்வதைத் தீர்க்கதரிசனம் என்கிறோம். கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசிகளுக்குச் சொல்லாமல் எதையும் செய்வதில்லை என்று வேதமும் நமக்குச் சொல்கிறது. ஆமோஸ் 3:7 ல் வாசித்துப் பாருங்கள்.

> *கர்த்தராகிய ஆண்டவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரருக்குத் தமது இரகசியத்தை வெளிப்படுத்தாமல் ஒரு காரியத்தையும் செய்யார். ஆமோஸ் 3:7*

கர்த்தர் தாம் செய்யப்போவதை மனிதர்களுக்கு முன் கூட்டியே வெளிப்படுத்திச் சொல்வதற்கு என்ன காரணம்? வேதத்தின் அடிப்படையில் கொஞ்சம் யோசித்துப் பார்த்தால் பிரதானமாக மூன்று காரியங்களுக்காக கர்த்தர் தம்முடைய ஊழியர்களுக்கு தாம் செய்யப்போவதை தீர்க்கதரிசனமாக வெளிப்படுத்திப் பேசுகிறார் என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது.

## 01. ஜனங்கள் சீர்கெட்டுப் போகாமலிருக்க :

முதல் காரணம், ஜனங்கள் யாரும் கெட்டுப்போகக்கூடாது என்பதற்காக தீர்க்கதரிசனங்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. தீர்க்கதரிசனம் இல்லாத இடத்தில் ஜனங்கள் சீர்கெட்டுப் போவார்கள் (நீதிமொழிகள் 29:18) என்கிறது வேதம்.

தீர்க்கதரிசனங்கள் ஜனங்களைச் சீர்படுத்துகிறது. அவர்கள் சகாயமின்றி சடுதியில் அழிந்து விடாதபடிக்கு தீர்க்கதரிசனங்கள் அவர்களை எச்சரிக்கை செய்கின்றன. மாத்திரமல்ல, வரப்போகிற பயங்கரங்களுக்கும், கோபாக்கினையின் தண்டனைகளுக்கும் அவர்கள் தப்பிக்கொள்ளும் வழிகளையும் தீர்க்கதரிசனங்கள் போதிக்கின்றன.

வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கும் பல தீர்க்கதரிசனங்களை நீங்கள் வாசித்துப் பார்த்தால் இனி வரப்போகும் பயங்கரங்களையோ, அல்லது கோபாக்கினையையோ வெளிப்படுத்திச் சொல்லும் கர்த்தர், அதிலிருந்து எப்படி தப்புவது என்கிற வழியையும் காண்பித்திருப்பார். உதாரணத்துக்கு, கடைசிக்காலங்களில் வரப்போகும் பயங்கரமான காரியங்களை தீர்க்கதரிசனமாக விவரித்துச் சொன்ன இயேசு, கடைசியில் அவைகளிலிருந்து தப்பிக்கும் வழியையும் பற்றிப் பேசியிருக்கிறார். லூக்கா 21ம் அதிகாரம் 6-35 வரைக்கும் உண்டான வசனங்களில் வரப்போகும் பயங்கரங்களைப் பற்றிச் சொல்லி, 36 வது வசனத்தில் அவைகளிலிருந்து தப்பும் வழியையும் காண்பித்திருக்கிறார்.

*ஆகையால் இனிச் சம்பவிக்கப்போ*

*கிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள் என்றார். லூக்கா 21:36*

தீர்க்கதரிசனங்களை நம்புகிறவர்களும், அதன்படியே நடக்கிறவர்களும் வரும் காரியங்களை முன்பதாகவே அறிந்துகொண்டு, அவைகளிலிருந்து தப்பிக்கொள்கிறார்கள். அவர்கள் மாத்திரமல்ல, தங்கள் தேசத்துக்கோ, பட்டணத்துக்கோ சொல்லப்பட்ட தீர்க்கதரிசனங்களை அறிய நேரிடும்போது அவைகளுக்காக திறப்பில் நின்று ஜெபித்து அவைகளையும் தப்புவித்துக்கொள்கிறார்கள்.

தீர்க்கதரிசனங்கள் உரைக்கப்படாதிருந்தால், அடுத்து வரப்போவதைக் குறித்த எந்தவொரு எச்சரிக்கையுமில்லாமல், தப்பிக்கொள்ள ஒரு சிறிய சந்தர்ப்பம் கூட இல்லாமல் அழிந்துபோக நேரிடும் இதன் காரணமாகவே கர்த்தர் தம்முடைய ஜனங்களும், தேசங்களும் சீர்கெட்டுப் போகாதபடிக்கு வரப்போகும் காரியங்களை முன்னறிவித்து, தப்பிக்கொள்ளும் போக்கை நமக்கு உண்டாக்குகிறார்.

பாவிகள் என்றும், நீதிமான்களென்றுமல்ல கர்த்தர் மனிதர் ஒருவரும் கெட்டுப்போகக் கூடாது என்று விரும்புகிறார். எனவேதான் வருங்காரியங்களை முன்னறிவிக்கிறார். அதை விசுவாசிக்கிறவர்கள் தப்பிக் கொள்கிறார்கள்.

## 02. வருங்காரியங்களை அறிந்துகொண்டு அதற்கேற்ப ஆயத்தப்பட :

கர்த்தர் வருங்காரியங்களை முன்னறிவிப்பதின் காரணம், வரப்போகிறவைகளை அறிந்து கொண்டு அதை எதிர்கொள்ள நாம் நம்மை ஆயத்தப்படுத்திக் கொள்வதற்காகவே.

வரப்போகும் சில காரியங்களை நாம் தடுத்து நிறுத்த முடியாது. ஆனால், அவைகளை எதிர்கொள்ள நாம் நம்மை ஆயத்தப்படுத்திக்கொள்ள முடியும். மழைக் காலங்களில் வானிலை அறிக்கைகள் சொல்வதுண்டு. புயல்கள் மற்றும் பலத்த காற்று வீசும் என்று முன்னறிவிப்புச் செய்வார்கள். அது, நாம் அவற்றைத் தடுத்துவிடுவோம் என்பதற்காக அல்ல. அதிலிருந்து நம்மைக் காத்துக்கொள்ள எச்சரிக்கையாயிருப்போம் என்பதற்காக. அந்தச் சமயத்தில் வீட்டைவிட்டு வெளியேறாமல் பத்திரமாக இருந்துகொள்ளலாம். கடலில் தொழில் செய்பவர்கள் கடலுக்குப் போகாமல் தவிர்த்து விடலாம். வெளியில் பிரயாணம் செய்பவர்கள் அதைத் தள்ளிப்போடலாம். முன்னெச்சரிக்கையாக நாம் நம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காகத்தான் வானிலை தகவல்களை முன்னறிவிக்கிறார்கள்.

**தீர்க்கதரிசனங்களும் அப்படித்தான். உங்களால் தடுத்து நிறுத்த முடியாத காரியங்களாயிருந்தாலும் நீங்கள் அதை எதிர்கொள்ள உங்களை ஆயத்தப்படுத்திக் கொள்வதற்காகத்தான் வெளிப்படுத்தப்படுகின்றன.**

கடைசிக்காலங்களில் கர்த்தர் தம்முடைய ஜனங்களுக்கும், சபைகளுக்கும் வரப்போகும் ஆபத்துகளைப் பற்றிக் கூட முன்னறிவித்துச் சொல்லியிருக்கிறார். அதின் காரணம், நாம் அவைகளை எதிர்கொள்ளத் தக்கதாக நம்மையும், நம் விசுவாசத்தையும் ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே. வாசித்துப்பாருங்கள் மத்தேயு 24:9-13

*அப்பொழுது உங்களை உபத்திரவங்களுக்கு ஒப்புக்கொடுத்து, உங்களை கொலை செய்வார்கள். என் நாமத்தினிமித்தம் நீங்கள் சகல ஜனங்களாலும் பகைக்கப்படுவீர்கள்.*

*அப்பொழுது அநேகர் இடலறடைந்து ஒருவரையொருவர் காட்டிக் கொடுத்து, ஒருவரையொருவர் பகைப்பார்கள்.*

*அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, அநேகரை வஞ்சிப்பார்கள்.*

*அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்துபோம். முடிவு பரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான்.*

கர்த்தருடைய ஜனங்களுக்கு வரப்போகும் இந்த உபத்திரவங்கள் பற்றி எதற்காக முன்னறிவிக்கப்பட வேண்டும். அதைத் தடுத்து நிறுத்துவதற்காக அல்ல. அந்த நாட்களை எதிர்கொள்ளும்படியாக கர்த்தருடைய ஜனங்கள் தங்களை ஆயத்தப்படுத்திக்கொள்ள வேண்டுமென்பதற்காகவே இவை சொல்லப்பட்டிருக்கின்றன.

நாம் இடலறடையாமல் இருக்கவும், யாரையும் காட்டிக்கொடுத்து நாம் தப்பிக்கொள்ள யோசியாதபடிக்கும், கள்ளத்தீர்க்கதரிசிகளின் வஞ்சகங்களுக்கு தப்பும்படி நம்மை ஆயத்தப்படுத்திக்கொள்ளும்படிக்கும், நம்

அன்பு தணிந்துபோகாமல் நாம் கவனமாக காத்துக் கொள்ளும்படிக்கும், முடிவுவரை எந்தவொரு சூழ் நிலையிலும் பின்வாங்கிவிடாமல் நிலைத்து நிற்கும் வைராக்கியத்தை வளர்த்துக்கொள்ளவுமே இவை முன்னறிவிக்கப்பட்டிருக்கின்றன.

### 03. அறிந்துகொண்டு நாம் அதற்குத் தப்பும் படியாக :

இன்னும் சில தீர்க்கதரிசனங்கள் நாம் வருங்காரியங்களை அறிந்துகொண்டு அவைகளுக்குத் தப்பிக் கொள்ளும்படியாக வெளிப்படுத்தப்படுகின்றன.

இப்படிப்பட்ட தீர்க்கதரிசனங்களில் கவனித்துப் பார்ப்பீர்களேயானால் நீங்கள் தப்பும்படி செய்வதற்கான கட்டளைகளும் சொல்லப்பட்டிருக்கும்.

அப்படி கட்டளைகளோடு அந்த தீர்க்கதரிசனம் வெளிப்படுத்தப்பட்டிருந்தால் நீங்கள் இவைகளுக்குத் தப்பித்துக் கொள்வதற்காக கர்த்தர் அதை உங்களுக்குச் சொல்கிறார் என்பதை விளங்கிக்கொண்டு தப்பும் வழிக்கான கட்டளையை நிறைவேற்ற வேண்டும்.

நோவாவுக்குச் சொல்லப்பட்ட உலக அழிவு பற்றிய தீர்க்கதரிசனம், நோவாவும் அவர் குடும்பமும் தப்புவதற்காகச் சொல்லப்பட்டது. ஆகவே, அந்த வெளிப்பாட்டில் நோவா செய்வதற்கான ஒரு கட்டளையும் சொல்லப்பட்டிருந்தது. நோவா தப்பும்படி ஒரு பேழையைச் செய்யும்படி கட்டளை கொடுக்கப்பட்டார். நோவா தப்புவதற்காக மாத்திரமல்ல, அந்தக் கட்டளையில் தேவனுடைய ஒரு திட்டமும் இருந்தது. உலகத்தை மறுபடியும் உருவாக்குவதே அந்தத் திட்டம்.

நன்றாக கவனியுங்கள். சில வெளிப்பாடுகள் நீங்கள் அறிந்துகொண்டு அவைகளை எதிர்கொள்ளவும், சில வெளிப்பாடுகள் நீங்கள் அறிந்துகொண்டு அதற்குத் தப்புவதற்காகவும் வெளிப்படுத்தப்படுகின்றன. தப்பும்படிக்கு சொல்லப்பட்ட தீர்க்கதரிசனங்களை நீங்கள் எதிர்கொள்ள வேண்டியதில்லை. தப்பினால் போதுமானது. நோவா வெள்ளத்தை எதிர்கொள்ளவில்லை. அதற்குத் தப்பினார்.

லூக்கா 21:6-35 வரைக்கும் சொல்லப்பட்டிருக்கும் கடைசிக்காலம் பற்றிய தீர்க்கதரிசனங்கள் கூட நீங்கள் தப்பிக்கொள்வதற்காகவே சொல்லப்பட்டிருக்கிறது. அதினால்தான், அந்த தீர்க்கதரிசனங்களின் முடிவில் தப்பும்படிக்கு நீங்கள் செய்யவேண்டிய கட்டளையும் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.



***ஆகையால் இனிச் சம்பவிக்கப்போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு எப்பொழுதும் ஜெபம் பண்ணி விழித்திருங்கள் என்றார்.***
***லூக்கா 21:36***

### 04. அறிந்துகொண்டு எச்சரிப்பதற்காக :

இன்னும் சில தீர்க்கதரிசனங்கள் நமக்கு வெளிப்படுத்தப்படுவதன் காரணம், நாம் அதை அறிந்துகொண்டு, அந்த தீர்க்கதரிசனம் யாருடைய பாதிப்பைப் பற்றிப் பேசுகிறதோ அவர்களுக்கு அதை அறிவிப்பதற்காகவே வெளிப்படுத்தப்படுகின்றன.

நினிவே கவிழ்க்கப்பட்டுப் போகப்போகிறது என்று யோனாவுக்குக் கர்த்தர் வெளிப்பாடு கொடுத்தது, யோனாவைக் காப்பாற்றுவதற்காகவோ, யோனா அந்த அழிவைத் தடுத்து நிறுத்துவதற்காகவோ அல்ல. அவர் அதை சம்மந்தப்பட்டவர்களுக்குப் போய் அதைச் சொல்வதற்காகவே வெளிப்படுத்தப்பட்டது. இந்த தீர்க்கதரிசனத்தால் யோனாவுக்கு எந்தப் பாதிப்பும் வரப்போவதில்லை.

இதுபோன்ற தீர்க்கதரிசனங்களை நீங்கள் வேதத்தில் பல இடங்களில் பல தீர்க்கர்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருப்பதை பார்க்க முடியும். இப்படிப்பட்ட தீர்க்கதரிசனங்களைப் பொறுத்தளவில் நீங்கள் அதைச் சம்மந்தப்பட்டவர்களுக்குச் சொல்லி எச்சரிக்க வேண்டும்

என்பது மாத்திரம்தான் உங்களுக்குக் கொடுக்கப்படும் வேலை. இதைத் தாண்டி நாம் இதில் ஒன்றும் செய்ய அவசியமில்லை. ஆனால் நாம் அதை அவர்களுக்கு அறிவிக்காமல் போனால், அந்தப் பயங்கரத்தில் அவர்கள் அழிவார்கள். அந்த இரத்தப்பழியையோ கர்த்தர் நம்மிடத்தில் கேட்பார். நாம் அந்த தீர்க்கதரி சனத்தில் சம்மந்தப்படவில்லை என்று நினைத்து நாம் இப்படிப்பட்ட தீர்க்கதரிசனங்களைக் குறித்து நிர்விசாரமாயிருந்து விடக்கூடாது.

எசேக்கியேல் புத்தகத்தில் இதுபற்றிச் சொல்லப்பட் டிருப்பதைக் கவனியுங்கள்.

> *17. மனுபுத்திரனே, உன்னை இஸ்ர வேல் வம்சத்தாருக்குக் காவலாளனாக வைத்தேன்; நீ என் வாயினாலே வார்த்தையைக்கேட்டு, என் நாமத்தி னாலே அவர்களை எச்சரிப்பாயாக.*
>
> *18. சாகவே சாவாய் என்று நான் துன்மார்க்கனுக்கு சொல்லுகையில், நீ துன்மார்க்கனைத் தன் துன்மார்க்க மான வழியில் இராதபடிக்கு எச்ச ரிக்கும்படியாகவும், அவனை உயி ரோடே காக்கும்படியாகவும், அதை அவனுக்குச் சொல்லாமலும், நீ அவ னை எச்சரிக்காமலும் இருந்தால், அந்தத் துன்மார்க்கன் தன் துன்மார்க் கத்திலே சாவான்; அவன் இரத்தப்பழி யையோ உன் கையிலே கேட்பேன்.*
>
> *19. நீ துன்மார்க்கனை எச்சரித்தும், அவன் தன் துன்மார்க்கத்தையும் தன் ஆகாத வழியையும் விட்டுத் திரும் பாமற்போவானாகில், அவன் தன் துன்மார்க்கத்திலே சாவான்; நீயோ வென்றால் உன் ஆத்துமானைத் தப்பு விப்பாய்.* எசேக்கியேல் 3: 17-19

### 05. வரப்போகும் பயங்கரங்களை தடுப்பதற்கும், குறைப்பதற்கும் :

இன்னும் சில தீர்க்கதரிசனங்கள், அதில் சொல்லப் பட்டிருக்கும் வரப்போகிற பயங்கரங்களை நாம் தடுத்து நிறுத்துவதற்கும், அல்லது அந்தக் காரியங்க ளில் பயங்கரத்தைக் குறைப்பதற்கும் வெளிப்படுத் தப்படுகின்றன.

எசேக்கியேல் 22:30 கர்த்தர் இப்படிச் சொல்கிறார்:

நான் தேசத்தை அழிக்காதபடிக்குத் திறப்பிலே நிற்க வும் சுவரை அடைக்கவுந்தக்கதாக ஒரு மனிதனைத் தேடினேன். ஒருவனையும் காணேன்.

சில அழிவுக்கான வெளிப்பாடுகள் தடுத்து நிறுத்தப் பட முடியும். சில வெளிப்பாடுகளின் பயங்கரங்கள் குறைக்கப்பட முடியும். மத்தேயு 24:22 ல் இப்படிச் சொல்லப்பட்டிருப்பதைப் பாருங்கள்.

> *ஏனெனில், உலகம் உண்டானது முதல் இதுவரைக்கும் சம்பவித்திரா ததும், இனிமேலும் சம்பவியாதது மான மிகுந்த உபத்திரம் அப்பொ ழுது உண்டாயிருக்கும்.*
>
> *அந்நாட்கள் குறைக்கப்படாதிருந் தால், ஒருவனாகிலும் தப்பிப்போவ தில்லை. தெரிந்துகொள்ளப்பட்டவர் கள் நிமித்தம் அந்த நாட்கள் குறைக் கப்படும்.*

நிறுத்தப்படவும், குறைக்கப்படவும் வெளிப்படுத்தப் படுகிற தீர்க்கதரிசனங்களுக்காக நீங்களும் ஜெபிக் கவேண்டும். ஜெபிக்கிறவர்களின் கைவசம் அவை களைக் கொண்டுபோய் சேர்க்கவும் வேண்டும்.

மேற்கண்ட இத்தனை காரணங்களுக்காகத்தான் தீர்க் கதரிசனங்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. ஒரு தீர்க் கதரிசனம் உங்களுக்கு வெளிப்படுத்தப்பட்டால் நாமும் தீர்க்கதரிசி என்று சந்தோஷப்படாமல், அந்த தீர்க்கதரிசனம் எதற்காக உங்களுக்குச் சொல்லப்பட் டிருக்கிறது, இதைக் கொண்டு நீங்கள் என்ன செய் யவேண்டும் என்பதை அறிந்துகொண்டு அதற் கேற்ப செயல்படவேண்டும்.

ஆயத்தப்பட வேண்டிய தீர்க்கதரிசனங்களுக்கு ஆயத்தப்படவேண்டும். தப்ப வேண்டிய தீர்க்கதரி சனங்களுக்குத் தப்பும்படியான கட்டளையை நிறை வேற்றவேண்டும். சொல்லப்பட வேண்டிய தீர்க்கத ரிசனங்களை சொல்லப்பட வேண்டியவர்களுக்கு கொண்டுபோய்ச் சேர்க்க வேண்டும். தடுக்கப்பட வேண்டியவைகளுக்கும், குறைக்கப்பட வேண்டிய வைகளுக்கும் நீங்கள் திறப்பில் நின்று ஜெபிக்க வேண்டும். ஜெபிக்கிறவர்களின் கைவசம் அவை களைக் கொண்டுபோய்ச் சேர்க்கவேண்டும்.

கர்த்தர் தரும் தீர்க்கதரிசனங்களின் நோக்கத்தைப் புரிந்துகொண்டு அதற்கேற்ப செயல்படுங்கள்.

# ஊழிய அறிக்கை

## தீர்க்கதரிசன உபவாச ஜெபம்

### 2025
### செப்டம்பர் 13



இராமநாதபுரத்தில் அமைந்திருக்கும் இயேசுவின் தொனி தீர்க்கதரிசன மையத்தில் கடந்த செப்டம்பர் 13ம் தேதியன்று தீர்க்கதரிசன காத்திருப்பு உபவாசக் கூடுகையாக கர்த்தருடைய வழிநடத்துதலின்படி நடைபெற்றது.

ஜனங்கள் தாங்கள் பெற்றுக் கொண்ட அபிஷேகத் தையும், வரங்களையும் அனல்மூட்டி எழுப்பவும், தேவ வார்த்தைகளுக்காக காத்திருக்கவும் நடத்தப் பட்ட இந்த கூட்டத்திற்கு முன்பதிவு செய்து தேர்வு செய்யப்பட்ட ஜனங்கள் தமிழ்நாட்டின் பல மாவட் டங்களிலிருந்தும், மாநிலங்களிலிருந்தும் வாஞ்சை யோடு கடந்து வந்திருந்தார்கள்.



ஆரம்ப ஜெபத்தை சகோ. ஜேம்ஸ் சிவக்குமார் அவர்கள் ஏறெடுக்க, சகோ. பிரகாஷ் மற்றும் சகோ. கிறிஸ்டோபர் இணைந்து முதல் பாடல் பகுதியை நடத்தினார்கள். தேவ பிரசன்னம் அளவில்லாமல் அந்த இடத்தை நிரப்பினதை உணர முடிந்தது.

தொடர்ந்து, வந்திருந்த ஜனங்களை ஆயத்தப் படுத்தும்படி ஜெபங்களை சகோ. ஜேம்ஸ் ஸ்வர் ணராஜ் அவர்கள் நடத்த, ஜனங்கள் ஒவ்வொரு வரும் தங்களை முழுமையாய் ஒப்புக்கொ டுத்து ஆயத்தப்படுத்திக் கொண்டார்கள்.

முதல் பகுதியில் நமது மதிப்பிற்குரிய தீர்க்க தரிசி வின்சென்ட் செலவகுமார் அவர்கள் தேவ னுடைய வார்த்தைகளை பகிர்ந்து கொண்டார் கள். கர்த்தர் நம்மிடம் பேச வேண்டுமானால் அதற்கு நாம் என்னென்ன காரியங்கள் செய்ய வேண்டும்? எவ்விதமாக கர்த்தர் நம்மிடம் இடைப்படுவார் என்பதை விளக்கிச் சொல்லி, அதற்காக நாம் எப்படியெல்லாம் ஆயத்தப்பட வேண்டும் என்கிற ஆழமான காரியங்களை கற்றுக் கொடுத்தார்கள்.

குறிப்பாக, கர்த்தர் எந்தெந்த விதங்களிலெல் லாம் பேசுவார், அதைப் பெற்றுக்கொள்ளும்



போது ஏற்படும் அடையாளங்களைப் பற்றியும் வசனத்தைக் கொண்டு விளக்கமாக கற்றுக்கொடுத்தார்கள்.

அதன் சுருக்கமாக, நம் ஆவியின் ஏவுதல் மூலமாக கர்த்தர் பேசுவார் என்றும், தேவன் தம்முடைய சத்தத்தின் மூலமாக பேசுவார் என்றும், தரிசனங்கள் மூலமாக கர்த்தர் பேசுவார் என்றும். பல ஆவிக்குரிய அனுபவங்களின் வழியாகவும் தேவன் பேசி, பல காரியங்களை வெளிப்படுத்துவார் என்று இந்த நான்கு விதங்களை வேதத்தின் அடிப்படையில் விளக்கிச் சொன்னபோது ஜனங்கள் ஆவலாய் செவிகொடுத்தார்கள்.

அதைத் தொடர்ந்து, ஆராதனை பகுதிக்குள் சகோ. ஜோனத்தான் மற்றும் சகோதரி ஏஞ்சலின் ஜோனத்தான் அவர்கள் ஜனங்களை நடத்தினார்கள். ஆராதனை வேளையில் கர்த்தருடைய அசைவாடுதலை பலமாய் உணர முடிந்தது.

இரண்டாவது பகுதியில், மதிப்பிற்குரிய தீர்க்கதரிசி வின்சென்ட் செல்வகுமார் அவர்கள் முதல் பகுதியில் சொன்ன செய்தியின் அடிப்படையில் ஜனங்களை அபிஷேகத்திற்குள்ளாக வழிநடத்தினார்கள்.

அபிஷேகத்திற்காக காத்திருந்த வேளையில், ஆயத்தத்தோடும் ஆவியில் விழிப்போடும் காத்தி





ருந்த ஜனங்களின் கண்களை கர்த்தர் திறந்து பல ஆவிக்குரிய அனுபவங்களை தந்தார். அநேகரை கர்த்தர் தமது பலத்த அபிஷேகத்தினால் நிரப்பி, தேசத்தில் வரவிருக்கிற ஆபத்துகள் குறித்தும், மறைக்கப்பட்ட அநேக இரகசியங்கள் குறித்தும் வெளிப்படுத்தினார். குறிப்பாக, குழந்தைகள் மேல் சாத்தான் கொண்டு வர திட்டமிட்டிருக்கும் ஆபத்துகளுக்காகவும், நெருப்பினால் பாதிப்புகள் வராதபடிக்கும் ஜெபிக்கும்படி வந்திருந்த ஜனங் களின் இருதயங்களை கர்த்தர் திறந்தார்.

தம்முடைய பாரத்தினாலும், ஜெப ஆவியினா லும், கண்ணீரினாலும் நிரப்பி மிகுந்த பாரத்துடன் ஜெபிக்க வைத்தார். வந்திருந்த ஜனங்கள் தேவ



மகிமையினாலும், வல்லமையினாலும் நிரப்பப் பட்டு, தாங்கள் பெற்றுக் கொண்ட வரங்களை அனல்மூட்டி எழும்பினார்கள். அழைப்பிற்குரிய அபிஷேகத்தினாலும், அடையாளங்களினாலும், பல தரிசனங்களினாலும் தேவன் அவர்களை நிரப்பி உறுதிப்படுத்தி, ஆயத்தப்படுத்தினார்.





வந்திருந்த ஜனங்கள் சந்தோஷத்தோடும், புதிய ஆவிக்குரிய அனுபவங்களை பெற்றவர்களாய் தொடர்ந்து ஜெபிக்க வேண்டுமென்கிற உத்தரவா தத்துடன் கடந்து சென்றார்கள். கர்த்தரே இந்த கூட்டத்தை பொறுப்பெடுத்து நடத்திக் கொடுத் தார். தேவ நாமம் மகிமைப்படுவதாக, ஆமென்.!

**ஜெப உதவி மற்றும் தகவல்களுக்கு எங்கள் அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளலாம்**

**(+91) 9788 404 333**



# ஆவிக்குரிய அனுபவங்கள்

**ஆவிக்குரிய கண்கள் திறக்கப்பட்டு தேவ தரிசனங்களைக் காண்பது என்பது இப்போது விசுவாசிக்கிற யாவருக்கும் சாத்தியமானது. இந்தக் கடைசிக்காலத்தில் ஆவிக்குரிய அனுபவங்கள் விசுவாசிக்கிற எல்லாருடைய வாழ்விலும் ஏராளமாக நடக்க ஆரம்பித்திருக்கிறது. இதுவும் கடைசிக்கால அடையாளங்களில் ஒன்று.**

## 1. சகோதரர். செல்வகுமார்

அக்கினிமயமான குதிரையும், குதிரையின் மேல் அக்கினிமயமாக வீற்றிருந்தவரையும் பார்த்தேன். அவர் பேசும்போது, நான்கு திசைகளிலும் போய் சங்காரம் செய்யப் போவதாக சொன்னார். நெருப்பினால் கட்டடங்கள் எரிகின்றதையும், போரினால் ஜனங்கள் மரிக்கப் போகிறதை தரிசனமாகப் பார்க்க முடிந்தது. வலுசர்ப்பமானது, என்னை ஒன்றும் செய்ய முடியாது என்று பேசினதைக் கேட்க முடிந்தது. ஐயா சொன்ன சில வெளிப்பாடுகளை பார்க்கவும் உணரவும் முடிந்தது. குதிரையின் சத்தம், பட்டயம் மற்றும் ஈட்டியை எடுக்கும் சத்தம் கேட்க முடிந்தது. மஞ்சள் நிற சர்ப்பம் பேசின வார்த்தையை கேட்க முடிந்தது. சிறகுகள் இல்லாத 3 தூதர்கள் பறக்கிறதைப் பார்க்க முடிந்தது. சிறு பிள்ளைகளின் மரண வார்த்தை கொண்ட பாடலை உணர முடிந்தது. ஜெபம் ஆரம்பிக்கும் போது பெரிய கழுகு பார்த்தேன். அதன் சிறகு முடி ரொம்ப மேலுமாக இருந்தது. கண் நெருப்பாக அக்கினியாக பறந்து போகிறதைப் பார்க்க முடிந்தது. அநேக தரிசனம் பார்க்க முடிந்து. என் கால்களில் குதிரை லாடம் கட்டினதுபோல் உணர்ந்தேன். என் கால்களை அசைக்க முடியவில்லை.

## 2. சகோதரர். ஜெய பாஸ்கர்

கர்த்தருடைய வல்லமையால் நிறப்பப்பட்டு கீழே விழுந்து விட்டேன். ஒரு விமானம் பின்பாக எரிந்து கொண்டே மேலாக பறந்து கொண்டிருந்தது. கீழே பாலைவனமான இடத்திலிருந்து ஒரு பெரிய பாம்பு மண்ணுக்குள் புரண்டு வந்தது. அங்கிருந்து ஒரு மனிதன் நடந்து வந்தான். அவன் அந்தக் காட்சியைப் பார்க்க முடியாதபடி சர்ப்பமானது வேறு திசையில் அவனை மாற்றினது. வானத்தில் மேகங்கள் மேல் எரிந்தும் எரியாததுமான நிலையிலிருந்த கையைப் பார்த்தேன். அநேக கட்டிடங்களை நெருப்பு பரவச் செய்ய பலவான் வருகிறான் என்பதை ஆவியில் உணர முடிந்தது. கர்த்தர் பலமாய் என்னை நிரப்பினார். சர்ப்பத்திற்காக ஜெபிக்கும்போது, முள் செடியில் தீ பற்றி எரிவது போல, பல சத்தங்கள் பெரிதாய் வெடிப்பது போலவும் பட்டயத்தை உருவுகிற சத்தமும் கேட்டது.

## 3. சகோதரி. கிருபா

தேசத்தில் கலவரத்தைத் தூண்டும் ஆவியை அறிந்துக் கொண்டேன். இனி வருகின்ற நாட்களில் சத்துருவானவன் உன் தேசத்தில் நிறைவேற்றும் திட்டம் அவன் கர்ப்பத்தில் இருக்கின்றது என்றார். குறிப்பாக மத கலவரத்தினால் உன் தேசத்தில் இரத்த ஆறு ஓடும் என்று கர்த்தர் வெளிப்படுத்தினார். ஒரு கரடி, தன் வாயினால் அநேக மீன்களை பிடித்துக் கொண்டிருக்கின்றது. இது அடுத்து வரப்போகின்ற பொருளாதாரப் பாதிப்பைக் குறிப்பதாக உணர்த்தப்பட்டேன். ஒரு

கருஞ்சிங்கம் தென்னாப்பிரிக்கா தேசத்திலிருந்து நம் தேசத்தை நோக்கி வருகின்றது. அப்பொழுது நம் தேசத்தில் பஞ்சம் வருகின்றதாக காணப்பட்டது.

### 4. சகோதரி. எஸ்தர் அர்ச்சனா

நறுமணத்தை உணர்ந்தேன். பெரிய நட்சத்திர ஹோட்டல்கள் மற்றும் பெரிய நிறுவனங்களில் இரவு நேரங்களில் நெருப்பினால் சேதங்கள் உண்டாகும் என்றும், அதற்காக ஜெபிக்கிற ஜாமக்காரர்கள் எழும்ப வேண்டும் என்று கர்த்தர் பேசினார். அநேக தேசங்களில் போரினால் அழிவுகள் உண்டாகும், அது பெரும் வெளிச்சமாகவும், கரும்புகையைப்போலவும், கீழிருந்து மேல் நோக்கி எழும்பினது. இது உக்ரைன் தேசத்தைவிட மிக கொடியதாக இருக்கும் என்று அந்த காட்சிகள் உணர்த்தியது. மருத்துவமனையில் அநேக குழந்தைகள் மற்றும் சிறுபிள்ளைகள் வென்டிலேட்டரில் இருக்கிறார்கள். அவர்களுடைய தோல்கள் நீலம் மற்றும் கறுப்பு நிறத்தில் மாறி உதிர்ந்துப்போனது. இதற்காக உத்திர வாதம் பண்ணுகிற ஜனங்கள் மற்றும் தாய்மார்கள் எழுப்பப்பட வேண்டும் என்று உணர்த்தப்பட்டேன்.

### 5. சகோ. அந்தோனி லெனட் ராஜா

இஸ்ரவேல் தேசத்தின் மலை பகுதியில் மிருகம் எழும்பி வருவதைக்குறித்து ஆவியில் யுத்த ஜெபத்தை ஏறெடுத்து அந்த ஆவியின் கிரியைகள் அழிக்கப்பட்டதை ஆவியில் உணர்ந்தேன். மஞ்சள் நிற பாம்பு வானத்தில் பறந்துப்போகிற விமானத்தை தள்ளிப்போடுவதை தடுத்து நிறுத்தவும், அந்த சர்ப்பத்தின் ஆவியை அழித்துப்போடும்படி ஜெபிக்க ஏவினார்.

### 6. சகோ. ஜான் பீட்டர்

ஜெப வேளையில் கர்த்தருடைய கரம் என்னைத் தொட்டபோது, பலமான வெளிச்சம்போல அபிஷேகம் என்னை பலமாய் நிரப்பியது. யார் என் காரியமாய் போவான் என்றும், ஆகாபின் இரதத்தை முந்தி ஓடக்கூடிய கூட்டம் எழும்ப வேண்டும் என்றும், சிங்கம் கெர்சிக்கிறது யார் தீர்க்கதரிசனம் சொல்லாதிருப்பான் என்று ஆவியின் ஏவுதல் என்னைப் பலமாய் நிரப்பினது. எக்காளம் ஊதுகின்ற சத்தத்தையும், இரண்டு பட்டயங்கள் உரசுகின்ற சத்தத்தையும் கேட்டேன். வானத்தில் கிரியைச் செய்கிற மஞ்சள் நிறப்பாம்புகளைப் பார்த்தேன். அநேக இடங்களில் இரயில் மற்றும் பெரிய, பெரியக் கட்டடங்கள் தீ பற்றியெறிகிறதைப் பார்த்தேன். கடைசி ஜெப வேளையில் தேசத்தின்மேல், மேகம் போல இருள் கொஞ்சம், கொஞ்சமாக விலகி ஒரு நெருப்பு போன்று வெளிச்சம் பரவியது. அபிஷேகத்திற்காக ஜெபிக்கும்போது, அக்கினி மழையைப்போல் ஊற்றப்பட்டது.

### 7. சகோதரி. அருணா

கலவரங்கள் மற்றும் கொள்ளை நோயினால் மரண அலைகள் இந்திய தேசத்தில் வரும் என்று கர்த்தர் வெளிப்படுத்தினார். அதற்காக பாரப்பட்டு, யுத்தம் பண்ணி ஜெபிக்கச் சொன்னார். சிறுபிள்ளைகள் மற்றும் ஊழியர்களின் இரத்தம் சிந்தப்படுகிறது, அதற்காக அதிக பாரத்துடன் ஜெபிக்க வேண்டுமென தரிசனம் பார்த்தேன்.

### 8. சகோ. யோசேப்பு

காத்திருந்த வேளையில், ஏறி வா! என்ற சத்தத்தைக் கேட்டவுடனே என் உடல் சிலிர்த்தது. ஆவிக்குள்ளாக்கப்பட்டேன். குளிர்ச்சியாகயிருந்தது. என் கண்களை திறந்தபோது, என் பக்கத்தில் வெளிச்சமாக நின்ற ஆண்டவரை பார்த்தேன். உலக முழுவதும் தெரிந்தது. என் கையில் தங்கம் நிறைந்த அக்கினியாய் இருக்கின்ற எக்காளத்தைத் தந்து, இதை உரத்த சத்தமாய் ஊது என்றார். ஊதினபோது, அதில் அக்கினியும், பயங்கரமுமான சத்தம் வெளிவந்தது. அவர் என்னை நீ என் சத்தமாயிருப்பாய் என்றார். என் இரண்டு காதுகளும் அனல் கொண்டு எக்காளத்தின் சத்தத்தைக் கேட்டேன். அக்கினிமயமான ஒருவர் என்னை தொட்டார். பலத்த அக்கினி அபிஷேகத்தால் நிரப்பினார். ஜெப வேளையில் மூன்று கந்தக ஆவிகளைக்குறித்து ஆவியிலே உணர்த்தினார்.

### 9. சகோ. பிரான்ஸிஸ் ஜான்

எருசலேமுக்காக ஜெபிக்கும்போது, ஒரு கொடிய மனித மிருகம் இரத்தத்தைக் குடிக்கிறது. மஞ்சள் நிற பாம்பை பார்த்தேன். அதன் வாய், தலை தான் மஞ்சள், அதன் சரீரம் மண்நிறமும், ஓணான் வகை போல் காணப்படுகிறது. சிறுபிள்ளைகள் கண்ணீரோடு நிற்கிறதைப் பார்த்தேன். என் பாதம் இரும்பு போன்று காணப்பட்டது. மிதி என்கிற சத்தம் கேட்டது. பச்சையும் கறுப்பும் கலந்த ஒரு தேசத்தின் கொடியைப் பார்த்தேன். அமெரிக்கா தேசத்தை யுத்தம் குறி வைக்கின்றதாக உணர்த்தப்பட்டேன்.

### 10. சகோ. சந்தோஷ்

நறுமண வாசனையை உணர்ந்தேன். வானத்திலிருந்து இரத்த சொட்டு என் தலையில் விழுந்தது. பெரிய பெட்ரோல் கிணறுகள், பெரிய கம்பெனிகளில் தீமைகள் கட்டவிழ்க்கப்படுவதாக கர்த்தர் பேசி, அதை கட்டும்படி ஜெபிக்கும்படி தரிசனமாகப் பார்த்தேன்.



## 11. சகோதரி. ரோஸ்லின்

ஆவியிலே அபிஷேகம் பெறக்கூடாதபடிக்கு இருக்கும் அடைப்புகள் விலக வேண்டுமென்று சொல்லும் போது பலமான அபிஷேகத்தினால் நிறப்பப்பட்டேன். விமான விபத்துகளைக்குறித்தும், குழந்தைகளைக்குறித்த பாரமும் நெருக்கப்பட்டதை என் ஆவியிலே உணர்ந்தேன். என் கண்களிலே கண்ணீர் வடிந்து கொண்டே இருந்தது. என் மனம் உடைந்தது போல இருந்தது. துப்பாக்கி, யுத்தம், இரத்தம் சிந்துதல் இவைகளைக்குறித்த ஆத்துமபாரத்தால் அதிகமாய் நிரப்பப்பட்டேன். ஒரு விக்கிரக கோபுரத்தையும், அதின் மேல் வெளிச்சத்தையும் பார்த்தேன். பெண் ஆவிகளைக் குறித்த காட்சியை பார்த்தேன். ஒளியின் வார்த்தைகளை கொண்டு கிராமங்களிலே இருக்கிற விக்கிரக பலிபீடங்களை நிர்மூலமாக்கவும், சுவிசேஷம் சொல்லவும் வேண்டுமென உணர்த்தப்பட்டேன்.

## 12. சகோதரி. சிரோன்மணி

சிறுகுழந்தைகள் பலர் தூக்கி வீசப்படுவதைப் பார்த்து அதிக பாரத்தோடு அழுதேன். குதிரைகள் சேனையாய் நிற்கிறதைப் பார்த்தேன், அதில் இருந்தவர்கள் பட்டயத்தை எடுத்து அநேகம் பேரை கொலை செய்தார்கள். அநேக இடங்களில் குண்டுவெடிக்கிறச் சத்தத்தைக் கேட்டேன். கரும்புகை மேலே எழும்புகிறதைக் கண்டேன்.

## 13. சகோதரி. பிரியா

ஒரு அழகான மலர் தோட்டம். லீலிபுஷ்பம் வாசனை, அங்கு ஆண்டவர் வா! உன்னிடம் பேச வேண்டும் என்றார். சிறுபிள்ளைகள் கருகி விழுவது, மருத்துவமனைகளில் டியூப் போட்டு இறப்பது, கருக்கலைப்பு, சத்துக்களில்லை, வியாதி, அதன் உடல் உறுப்புகள் சரியான வளர்ச்சி இல்லை என்றும், வயிற்றிலுள்ள பிஞ்சு குழந்தைகள் கொத்துக்கொத்தாக கொல்லப்படுகிறதை பார்த்தேன். பெண்ணின் ஆவி எழுந்து, குகைகள், காடுகளில் இரத்தம் சிந்த வைக்கின்றது. பதின்மை வயது பிள்ளைகளைக் குறிவைத்து போரினால் கொன்று இரத்தம் குடிக்கிறது. அந்த ஆவிக்கு விரோதமாக எதிர்த்து யுத்தம் பண்ணும்படி, எழும்பு சீயோனே! உன் வல்லமையை தரித்துக்கொள் என்று கர்த்தர் சொல்லுவதைக் கேட்டேன். வானத்திலிருந்து பாம்பின் ஆவி விமான விபத்துக்களை உண்டுபண்ணுகிறது. கோபமாக அந்த பாம்பு, இரத்தம் குடிக்க தீவிரிக்கிறது. அதன் வால்பகுதியை பிடித்து மோதி அடித்தபோது இறந்து போனது. அமெரிக்கா, குஜராத், சென்னை, கொல்கத்தா போன்ற இடங்களில் உள்ள ஹோட்டல்கள், நிறுவனங்கள் எரிந்து, பொருளாதாரம் மற்றும் மனித உயிர்களையும் கொன்று குவிக்க அந்த நெருப்பு இறங்கியது. கர்த்தரின் அக்கினியினாலும், என் வாயின் வார்த்தையினாலும் இதை அழித்துப் போடு என்றார்.

## 14. சகோதரி. ஹெலன் மேரி

கர்த்தரின் வல்லமையான அபிஷேகம் என்னை நிரப்பியபோது, ஒருவிதமான நறுமணத்தை உணர்ந்தேன். உயர்ந்த கட்டடத்தின் மேல் தளத்தில் தீயணைப்பு வீரர்கள் பெரிய, பெரிய டியூப் வைத்து தீயணைக்கப் போராடிக் கொண்டிருந்ததைப் பார்த்தேன். காற்றுபுக முடியாத ஒரு அறையில், ஒரே உயரத்தில் உள்ள அநேகர் அடைக்கப்பட்ட நிலையில் நின்றார்கள். திடீரென்று கைகளை உயர்த்துகின்றார்கள், ஒரே பக்கமாக சாய்கின்றார்கள்.

## 15. சகோ. முருகவேல்

ஜெப நேரத்தில் என் வலது, இடது புறத்திலும் இரண்டு தேவதூதர்கள் பட்டயத்தோடு நின்றார்கள். எனது கையில் தங்க நாணயங்கள் நிறைந்த ஒரு மண் கலயம் கொடுக்கப்பட்டது. அதிலிருந்து ஒரு குத்துவிளக்கு வெளிப்படுகிறது, சிறிது நேரத்தில் பிரகாசிக்கின்ற விளக்காக எரிக்கிறதையும் பார்த்தேன். எட்டு கைகள் இருக்கின்ற ஒரு சிலை முன்பு இரத்தம் ஓடுகிறதையும், இரத்தத்தின் மீது அந்த சிலையிருக்கிறதையும் பார்த்தேன். என் கையில் ஒரு வெள்ளைத்துணியால் மூடப்பட்ட, பல ஆண்டுகளுக்கு முன்னுள்ள, ஒரு பெரிய அளவிலான சுற்றப்பட்டிருக்கும் புத்தகக் கட்டுகள் கொடுக்கப்படுகிறது. ஆனால் அது பருமனாக இல்லாமல் லேசாக இருப்பதை உணர்ந்தேன். வானத்

திலிருந்து ஒரு பெரிய சங்கிலி கீழேத் தொங்குகிறது. அதின் மறுமுனையில் நங்கூரம் போன்று இணைக் கப்பட்டு இருக்கிறது. அது என் கையில் கொடுக்கப் பட்டபோது, நெருப்பு போல் மாறுவதையும், பின்பு அது தங்க நிறத்தில் மாறுவதையும் அதனைச்சுற்றி முள்ளாக இருப்பதையும் பார்த்தேன். மலைப்பிர தேசத்தில் இருக்கிற மரங்கள் அடியோடு உடைந்து விழுவதையும் பார்த்தேன். மழை பயங்கரமாக பெய் கிறது, பனிப்படலம் போன்று துகள்கள் கொட்டுவதை யும், ஒருவர் என் கையில் பெரிய அளவிலான பேப்பர் கட்டுகளைக் கொடுத்து வேகமாக கொண்டு போ! என்று என்றவுடன், நான் அதை வாங்கிக் கொண்டு, துரிதமாக செல்கிறேன். என் தலையில் ஒரு தொடுதல் ஆரம் பத்திலிருந்தே உணர்ந்தேன். குறிப்பிட்ட நேரத்திற்கு பின், அது ஒரு விரல் போன்றும் எனது தலையில் நெருப்பு போன்றும் இறங்கியதை உணர்ந்தேன்.

## 16. சகோதரி. இராமலெட்சுமி

மிக ஆக்ரோஷமாக எழும்புகிற மகா வேசியை பார்த் தேன். அநேக பரிசுத்தவான்களின் இரத்தம் சிந்தப்பட போகிறது என்றார். அநேக இடங்கள், கட்டடங்கள் தீப்பற்றி எரிந்து கரும்புகையாக தெரிகிறது. கறுப்பு நிறத்தில் பார்க்க அருவருப்பாகவும், கையில் ஆயுதத்தை யும் வைத்திருக்கின்ற ஒரு ஆவியைப் பார்த்தேன். குழந் தைகள் மரித்து மருத்துவமனையில் கிடப்பதை ஆவி யில் உணர்ந்தேன். உத்திரவாதம் பண்ணி ஜெபி என் றார். விமானத்தில் பயணம் செய்கிறவர்களின் பாது காப்பிற்காக ஜெபிக்கும்படி உணர்த்தப்பட்டேன். மரங் கள் தீப்பற்றி எரியும் சத்தம் கேட்டது. ஒரு புது இடத் திற்குள் செல்வதுபோல, குழி அதிகமான இடத்திற்கு சென்றால் எப்படி இருக்குமோ அவ்வாறு உணர்ந்தேன்.

## 17. சகோதரி. சுலோச்சனா

தரிசனத்தில் ஒரு அகல்விளக்கின் அடி பகுதி மங்கி யும், முனைப்பகுதி வெளிச்சமாகவும், அடிப்பகுதி யில் ஒரு கம்பு தூக்கிப் பிடித்துக் கொண்டிருக்கிற தைப் பார்த்தேன். இதைக்குறித்து கர்த்தரிடத்தில் கேட்டபோது, இந்த இடத்தில் இருக்கின்ற அநேகர் கர்த்தரின் வெளிச்சத்தைக் கொண்டுபோய், அநேக இடங்களில் இருக்கும் இருளை துரத்த வேண்டும் என்று பேசினார். அநேக சிறுபிள்ளைகளுக்கு பாரப்பட்டு ஜெபிக்கும்படி ஏவினார். எழும்பு சீயோனே! உன் வல்லமையைத் தரித்துக்கொள் என்ற வார்த்தை வந்துக் கொண்டே இருந்தது. என் கைகளிலும், கால்க ளிலும் இதுவரை இல்லாத அபிஷேகம் பலமாக இறங் கியது. ஒரு பெரிய ரோடு அதின் நீண்ட தூரம் வரை, இருபுறமும் பசுமையாகவும், பார்ப்பதற்கு மிகவும் அழகாகவும் இருக்கிறது. அந்த ரோட்டின் ஓரங்களில் வெள்ளை நிறத்தில் அநேக சிறுபிள்ளைகள் கோரஸாக பாடி கொண்டே இருக்கிறதைப் பார்த்தேன். சிறுவய திலேயே கொல்லப்பட்ட குழந்தைகள் தங்கள் ஜீவ னுக்காக பாடுவதாக சொன்னார்கள். அதற்காக பாரப் பட்டு ஜெபிக்க கர்த்தர் ஏவினார். அநேக குதிரைகளின் சத்தமும், சிறுபிள்ளைகளின் கூக்குரலும் கேட்டது. சிறு குழந்தைகளுக்கு வரும் கொள்ளைநோய் பற்றி ஜெபிக்கும்போது, வடகொரியா மற்றும் ஜப்பான் குழந் தைகள் கருகிப்போகிறதை காண்பித்து, அதற்காக ஜெபிக்கும்படி ஏவினார்.

## 18. சகோதரி. சத்தியா

கர்த்தரிடம் அடையாளம் கேட்டபோது, என் நாவைத் தொட்டார். நாவு சூடாக இருந்தது. மழை பொழிகின்ற சத்தம் அதிகமாக கேட்டது. காடுகளில் நெருப்பு பற்றி யெறியும் சத்தம் கேட்டேன். மலைமேல் கட்டப்பட்ட வீடுகள் இடிந்து விழுவதை தரிசனமாகப் பார்த்தேன். குதிரை ஓடுகின்ற சத்தத்தையும், எக்காள சத்தத்தை யும் கேட்டேன். குழந்தைகளின் பாதிப்பை வெளிப்ப டுத்தி பாரத்துடன் ஜெபிக்க வைத்தார். அக்கினி அபி ஷேகத்தால் நிரப்பப்பட்டேன்.

## 19. சகோதரி. ஜலஜா குமாரி

ஆவியின் ஏவுதலுக்காக ஜெபித்துக் கொண்டிருந்த போது மனிதர்களை பிறப்பிக்கிற பெண் ஆவியை எதிர்க்க தேவன் ஆவியிலே ஏவினார். கர்த்தர் என் கையில் பெரிய வாளைக் கொடுத்தார். ஒரு பெரிய சர்ப்பத்தைப் பார்த் தேன். அது தேவ ஊழியர்களையும், தேவன் பயன்படுத்த வேண்டிய வாலிபர்களயும் வீழ்த்தும்படி போகிறது என்று காண்பித்து, அதை எதிர்க்கவும், அது தேவ பிள் ளைகளை தொடாதபடிக்கு வீழ்த்தவும் தேவன் கூறி னார். என்மேல் அக்கினி பலமாய் இறங்கி வந்தது. என் காதுகளில் தேவ வல்லமை இறங்கியது. தொண்டையி லிருந்து பலத்த சத்தம் வெளிப்படுவதை உணர்ந்தேன்.

## 20. சகோ. அருள் தாமஸ்

கர்த்தருடைய வார்த்தையை எப்படி பெற்றுக்கொள்வ தென்று சொல்லிக் கொடுத்தது மிகவும் பிரயோஜன மாக இருந்தது. அபிஷேக வேளையில் கர்த்தர் பல மாய் என்னை நிரப்பினார். விமான விபத்துக்கள், கருவி லுள்ள குழந்தைகளின் கொள்ளை நோய் மற்றும் தீ விபத்துக்கள் பற்றின காரியங்களை ஜனங்களுக்குள் கொண்டு போக வேண்டுமென்றும், இதற்காக ஜெபிக்கி றவர்களை எழுப்ப வேண்டுமென்றும் உணர்ந்தேன்.

## வேத தியானம்

# கர்த்தர் என் அடைக்கலம்

## சகோதரி ஏஞ்சலின் ஜோனத்தான்



*தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக் காலத்தில் அனுகூலமான துணையுமானவர். சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார். யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர். சங்கீ 46:1,7*

அடைக்கலம் என்றால் சுற்றிலும் ஆபத்தான சூழ்நிலைகள் நெருக்குகின்றபோது நம்மைப் பாதுகாக்கிற அரண் என்று அர்த்தம். நம் வாழ்வில் தினந்தோறும் பல போராட்டங்களை, பிரச்சனைகளை சந்தித்துக் கொண்டே வரும் நேரங்களில், அடுத்து என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்து, பயந்துபோன தருணங்களில் நம்மைப் பாதுகாக்க ஒரு அடைக்கலம் தேவை வேண்டுமென்று, நம் அருகிலிருக்கும் நண்பர்களை, உறவினர்களைத் தேடிப் போகிறது வழக்கம். ஆனால், மனிதர்கள் நமக்கு ஒருநாளும் அடைக்கலமாக இருக்கவே முடியாது என்பதுதான் நிதர்சனமான உண்மை.

பழைய ஏற்பாட்டு காலங்களில் மனிதர்கள் தவறுகள் செய்துவிட்டால், தவறுகளினால் வரும் தண்டனைகளிலிருந்து தப்பித்துக் கொள்ள தேவன் ஆறு அடைக்கலப் பட்டணங்களைக் கொடுத்திருந்தார். இந்த அடைக்கலப் பட்டணத்திற்குள்ளாக தவறு செய்த ஒரு மனிதன் ஒளிந்து கொண்டால், அதிலிருந்து வெளியே வரும்வரை எதிரிகள் அவனைத் தொடவே முடியாதபடி அடைக்கலப் பட்டணங்கள் பாதுகாக்கும் ஒரு அரணாக இருக்கும். புதிய ஏற்பாட்டுக் காலத்திலும் நமக்கு ஒரு அடைக்கலப் பட்டணம் உண்டு. அது ஒரு கட்டடம் அல்ல, கர்த்தரே நமக்கு அடைக்கலப் பட்டணமாக இருக்கிறாரென்பது எத்தனை பெரிய ஆசீர்வாதம் பாருங்கள். நம் வாழ்வில் பிரச்சனைகள், போராட்டங்கள் வருகிற நேரங்களில் இயேசுகிறிஸ்து எனும் அடைக்கலத்திற்குள் ஓடி ஒளிந்து கொண்டால், அவரே நம்மைப் பாதுகாக்கிற அரணும் கோட்டையும் கேடகமுமாய் இருப்பார். எதிராளியான சாத்தான் ஒருநாளும் நம்மைத் தொடவே முடியாது.

### நம்மை பாதுகாக்கும் அரண்கள் எது?

**1. இயேசுகிறிஸ்துவின் இரத்தம் - வெளி 12:11**

*மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள்.*

பாவங்கள், ஜென்ம சுபாவங்களிலிருந்து இயேசுகிறிஸ்துவின் இரத்தம் நம்மை விடுதலையாக்கி மன்னிப்பை வாங்கிக் கொடுத்திருக்கிறது. பாவங்கள் நிறைவாகும்போது, தேவ நீதியின் அடிப்படையில் வரும் நியாயத்தீர்ப்பிலிருந்து நாம் தப்பித்துக் கொள்ளும்படி நமக்கு அரணாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இயேசுவின் இரத்தம் நம்மைக் கழுவும், விடுவிக்கும், நம்மை பாதுகாக்கும்.

**2. அபிஷேகம் - 1 யோவான் 2:20**

அபிஷேகமாகிய அரணுக்குள் நாம் மறைந்து கொண்டால், சாத்தான் ஒருநாளும் நம்மை தொட முடியாது. நம் வாழ்வில் எதிலெல்லாம் கட்டப்பட்டிருக்கிறோ

மோ, அவைகளை அபிஷேகம் உடைக்கும். சத்தியத்திற்குள் வழிநடத்தும். சரியான பாதையில் நடக்கும்படி போதிக்கும். பலவீனங்களில் நம்மைப் பலப்படுத்தும். நாம் ஒருநாளும் தனியாக இல்லை, அபிஷேகம் நம்மை வலிமையும் பலமுள்ளவர்களாய் மாற்றி திடப்படுத்த வல்லமையுள்ளது.

### 3. வேத வசனம் - சங்கீதம் 119:105

*உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது.*

பல நேரங்களில் நம்மைச் சுற்றி என்ன நடக்கிறதென்று தெரியாமல் சோதனைகளிலும், இருளான பாதைகளிலும் தடுமாறி நடந்து கொண்டிருக்கலாம். வேத வசனங்களே நம் பாதைக்கு தீபமும், வெளிச்சமுமாய் இருந்து சத்திய பாதைகளில் நாம் தைரியமாய் நடக்கும்படி உதவி செய்து வழிநடத்தும். பாதுகாக்கும். உலகத்தை ஜெயிக்கவும், உபத்திரவங்களில் நம் விசுவாசத்தை தட்டியெழுப்பி பலப்படுத்தும். வசனங்களால் இருதயத்தை நிரப்பும்போது நமக்கு தெளிவையும், தைரியத்தையும், அதிகாரத்தையும் தந்து, கர்த்தருக்குள் நிலைத்திருக்க செய்யும்.

### 4. வாக்குத்தத்தங்கள்

வாக்குத்தத்தங்கள் என்பது வெறும் வார்த்தைகளல்ல. வல்லமையும் அதிகாரமும் நிறைந்தது. புயல் போன்ற பிரச்சனைகளில் மூழ்கிக் கொண்டிருக்கிறேன் என்று பயந்து கொண்டிருக்கிற நேரங்கள் வரும். உலகம் ஏமாற்றி, மனிதர்களின் அன்பு குறைந்து கைவிடும் நேரங்களில் அடுத்து என்ன செய்வதென்று தெரியாமல் தவிக்கும்போதும், விசுவாசத்திலும் ஜெபத்திலும் குறைவுபட்டிருக்கும் நேரங்களிலும் தேவன் கொடுத்த வாக்குத்தத்தங்கள் ஒரு நங்கூரம்போல, தீபம்போலிருந்து நம்மை கரம்பிடித்து தாங்கி வழிநடத்தும். குறைவுகளை நிறைவாக்கும்.

### 5. திருச்சபைகள் - 1 கொரி 12:27

சபை என்பது ஒரு கட்டடமல்ல. பல சமயங்களில் அப்படித்தான் நினைத்துக் கொண்டிருக்கிறோம். சபைகளை அடைக்கலப் பட்டணமாக, நம்மைப் பாதுகாக்கும் அரணாக தேவன் கொடுத்திருக்கிறார். இந்த அரணுக்குள் நாம் மறைந்து கொண்டால், பாதாளத்தின் வாசல்கள் ஒருநாளும் மேற்கொள்ளாது. இது ஒருவர் செய்கிற ஜெபங்கள் நம்மை பாதுகாக்கவும் வல்லமையுள்ளது. சபைகளில் கர்த்தருக்கென்று செய்யும் ஊழியங்கள் நம்மை பாதுகாக்கும் அரணாக, கேடகமாக இருக்கும்.

நம் வாழ்வில் பயங்கள், சோதனைகள், போராட்டங்கள் நெருக்கும்போது, மனிதர்களைத் தேடி அல்ல. நம் அடைக்கலமும் அரணுமாயிருக்கும் இயேசு கிறிஸ்துவிடம் ஓடி மறைந்து கொள்ள வேண்டும். தேவ பிரசன்னம் நமக்கு சமாதானத்தை தந்து பாதுகாக்கும்.

தினந்தோறும் நம் ஆவிக்குரிய வாழ்வில் கண்களுக்குத் தெரிந்த, கண்களுக்குத் தெரியாத பல ஆபத்துகளை நாம் சந்தித்தேயாக வேண்டும். சங்கீதம் 91:3-7 வசனங்களில் சொல்லப்பட்டிருக்கும் கண்களுக்கு தெரியாத அக்கினியஸ்திரங்களை சாத்தான் நம்மேல் எரிந்து கொண்டேயிருப்பான்.

*5. இரவில் உண்டாகும் பயங்கரத்திற்கும், பகலில் பறக்கும் அம்புக்கும,*
*6. இருளில் நடமாடும் கொள்ளைநோய்க்கும், மத்தியானத்தில் பாழாக்கும் சங்காரத்துக்கும் பயப்படாதிருப்பாய்.*

நம் கண்களுக்குத் தெரிந்த, தெரியாத எந்த ஆபத்துகளாய் இருந்தாலும் சரி. இயேசு என்கிற அரணுக்குள் ஓடி மறைந்து கொண்டால், எதுவும் தொட முடியாது. உலகத்திலிருந்தும், சாத்தானின் சகல போராட்டங்களிலிருந்தும் கிறிஸ்து நம்மைப் பாதுகாக்க அரணாகவும், வல்லமையுள்ளவராகவும் இருக்கிறார். எல்லாவற்றிலிருந்தும் விலக்கிப் பாதுகாப்பேன் என்பதாக தேவன் வாக்குக் கொடுத்திருக்கிறார். பிரச்சனைகள் வரலாம். ஆனால், கர்த்தருக்குள் இருக்கும்போது அவரே நம்மை பாதுகாக்கும் அரணாக இருக்கிறார் என்கிற விசுவாசமும், நம்பிக்கையும் நமக்கு உண்டு.

> “கர்த்தரோடு நெருங்கிப் பழகுகிற அவருடைய பிள்ளைகள் ஒரு சோதனையை சந்திக்க நேரிடும்போது, மற்ற உலக மனிதர்கள் பார்க்கிற பார்வையிலே அதைப் பார்க்கக் கூடாது. சோதனைக் காலத்தைக் குறித்து மற்றவர்கள் எப்படி வருத்தப்படுகிறார்களோ, என்ன நினைக்கிறார்களோ அந்த எண்ணங்களுக்கு நாம் இடங்கொடுக்கக் கூடாது. அதில்தான் நம்முடைய வெற்றியின் இரகசியம் அடங்கியிருக்கிறது. நாம் சோதனைக் காலங்களைக் கடந்து வரவேண்டும் என்பது கர்த்தருடைய தீர்மானம்.”

# அடிமைப்படுத்தும் போதைப்பழக்கம்



இன்றைக்கு உலக நாடுகள் எதிர்கொள்ளுகிற முக்கிய மான பிரச்சனைகளில் ஒன்று போதை பழக்கம். போதை பழக்கம் நாட்டிற்கு மிகப் பெரிய சாபமாகவும், நாட்டின் வளர்ச்சிக்கு மிகப் பெரிய சவாலாகவும், தடை யாகவும் இருக்கிறது.

முந்தைய காலங்களில் போதைக்கு அடிமையானவர் கள் எந்தவொரு பாவத்தையும் செய்யும் பொழுது சமு தாயத்திற்கு தன்னை ஒளித்துக் கொண்டு மறைக்கப் பட்ட இடத்தில் தான் செய்வார்கள். மற்றவர்கள் இவர் களுடன் பழகுவதையே நிறைய நேரங்களில் தவிர்ப்பார் கள். ஆனால் இன்றைய சமுதாயத்தில் வயது வித்தியாச மின்றி போதைபழக்கம் வேரூன்றி இருக்கிறது.

பள்ளி கல்லூரிகளில் படிக்கிற பிள்ளைகள் கூட விளை யாட்டுப்போல போதை பழக்கத்தைக் கையாண்டு நாளடைவில் அதற்கு அடிமைப்பட்டு, அதிலிருந்து வெளியே வர முடியாதபடிக்கு இந்த போதை ஒவ் வொரு வாலிபர்களையும் அடிமைப்படுத்தி வைத்தி ருக்கிறது. போதை இல்லாமல் அவர்களால் வாழவே முடியாது என்கிற நிலைக்கு தள்ளப்படுகிறார்கள். போதை பொருட்களை வாங்க பணம் வேண்டுமென்ப தற்காக தங்கள் சொந்த சரீரங்களை விற்கவும், சக மனி தனை கொலை செய்ய வேண்டுமென்றால் கூட துணிந்து கொலை செய்துவிடுகிறார்கள். இப்படிப்பட்ட சமுதாயமாகத்தான் மாறிக்கொண்டு வருகிறது.

கடந்த 10 ஆண்டுகளில் போதைகளினால் மரித்த வர்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட ஏழு சதவிகிதம் அதிகரித்திருக்கிறது. அதிலும் குறிப்பாக, நம்முடைய இந்தியாவில் மட்டும், கிட்டத்தட்ட 1.4 கோடிப்பேர் இதற்கு அடிமையாக இருக்கிறார்கள். 17 வயதிலி ருந்து 25 வயது வரைக்குமுள்ள வாலிபர்கள்தான் இந்த போதை பழக்கத்திற்கு அதிக அளவில் அடி மைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். இதில் இன்னும் நாம் கவனிக்க வேண்டிய காரியம் என்னவென்றால், மூன்றில் ஒரு நபர் பெண்ணாக இருக்கிறார்கள். நம்மு டைய சமுதாயம் எந்த அளவுக்கு தீமையினால் நிரப் பப்பட்டிருக்கிறது என்பதை இதன்மூலம் அறிந்து கொள்ள முடியும்.

பொதுவாக, தேசத்தில் நடக்கிற குற்றங்களுக்கு பின் புலத்தில் பெரும்பாலும் இந்த போதைக்கு அடிமை யாயிருக்கிற ஜனங்கள்தான் இருப்பார்கள். அவர்கள் போதையிலிருப்பதால் எந்த நேரத்திலும் எதைப் பார்த்தும் பயமே இருக்காது. இவர்கள் பல குற்றங் களையும் துணிந்து செய்வார்கள். உளவியல் ரீதியாக பார்த்தாலும் பெருமளவில் பாதிக்கப்பட்டவர்க ளாத்தான் இருப்பார்கள். தன்னைத் தானே கட்டுப்ப டுத்த முடியாத நிலைக்கு தள்ளப்பட்டிருப்பார்கள். ஒரு மிருகத்தனமான வாழ்க்கையாகவே இவர்கள் வாழ்க்கை இருக்கும்.

அவர்கள் எந்த வேலைக்கும் போகாததினாலும், குடிப்பதற்கே அதிக பணங்களை செலவழிக்கிறதினா லும் அவர்கள் குடும்பங்களிலும், சமுதாயத்திலும் பாதிப்புகளை ஏற்படுத்திக் கொண்டிருப்பார்கள். குடும் பங்களில் வறுமைகள் பெருகுகிறதும், சண்டைகளும் நிம்மதியற்ற சூழ்நிலைகளும் உருவாகிறது. அது மாத் திரமல்ல, குடும்பங்கள் பிரிக்கப்படுவதையும், பிள்ளை கள் படிப்பை தொடர முடியாத சூழ்நிலைக்கு தள்ளப் பட்டு தற்கொலைக்கு கூட கடந்து போகும் சூழ்நிலை யையும் பார்க்கிறோம்.

போதைக்கு அடிமையாக இருக்கிறவர்களின் சரீரத்திலும் மிகப் பெரிய பாதிப்புகளை ஏற்படுத்துகிறது என்கிறது ஆய்வு. மூளையில் மிகப் பெரிய பாதிப்புகளை உண்டாக்கி, நினைவாற்றல் குறைந்து போகும். இரத்த அழுத்தம் அதிகரிக்கும். நுரையீரலில் கோளாறுகளும், சிறுநீரக குறைபாடுகளும், மாரடைப்பு மற்றும் திடீர் மரணங்களும் அடிக்கடி சம்பவிக்கும். சில போதை மருந்துகளை உட்கொண்டால் நரம்பு மண்டலத்தை பெருமளவில் பாதித்து மூளையின் செயல்பாட்டை குறைத்துவிடும். இதனால் சரீரத்தில் மனச்சோர்வுகளும், கண்களில் மாய பிம்பங்களும் தோன்றும்.

மேலும், போதை பொருட்களை பயன்படுத்துகிறவர்கள் எந்தச் சூழ்நிலையிலும், அதை வாங்கி உபயோகிக்கும் நிலைமையில் இருக்கிறதினால் விற்பனையில் ஈடுபடுவோருக்கு அதிக லாபம் கிடைக்கிறது. இதனால் சில தேசங்கள் இதை உற்பத்தி செய்து விற்பனை செய்வதை ஒரு தொழிலாகவே வைத்திருக்கிறது. குறிப்பாக, மொராக்கோ, மெக்ஸிகோ, ஆப்கானிஸ்தான் மற்றும் மியான்மார் போன்ற தேசங்களில், போதை பொருட்களை அதிகமாக உற்பத்தி செய்து விற்பனை செய்கிறார்கள். இந்தியாவில் பஞ்சாப், மணிப்பூர், மிசோராம் மற்றும் நாகாலாந்து போன்ற நம் தேசத்தின் எல்லைப்புறமான இடங்களில் போதை பொருட்களின் விற்பனை அதிகமாக உள்ளது. ஏனென்றால், இந்த மாநிலங்கள் ஒரு தேசத்திலிருந்து இன்னொரு தேசத்திற்கு கடந்து போகும் எல்லைப் பகுதியாக இருக்கிறதினால் போதை பொருட்களின் நடமாட்டம் அதிக அளவில் இருக்கிறது.

தேவ பிள்ளைகளாகிய நாம் போதை பழக்கம் சமுதாயத்தை பாதிக்கக்கூடாது என்பதற்காக வைராக்கியமாக ஜெபிக்க வேண்டும். போதை பொருட்களின் அடிமைத்தனத்திலிருந்து ஜனங்கள் விடுவிக்கப்பட்டு விலையேறப்பெற்ற ஆத்துமாக்கள் காக்கப்பட வேண்டும். தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாத நிலையில், தங்களை மறந்து பைத்தியம் பிடித்தவர்களைப்போல தெருக்களில் சுற்றித் திரிகிறார்கள். இப்படிப்பட்ட ஜனங்களின் இருதயத்தை கர்த்தர் தொட்டு மனம் மாறப்பண்ணவும், அவர்களின் ஆத்துமாக்களை தேவன் இரட்சிக்கவும் போராடி ஜெபிக்கலாம் வாங்க.!

## ஜெபக்குறிப்புகள்

**1** போதைப் பழக்கத்திற்கு அடிமையாகி அதில் சிக்கியிருக்கிற ஜனங்கள் குறிப்பாக, பள்ளி கல்லூரிகளில் படிக்கிற பிள்ளைகள், வாலிபர்கள் விடுவிக்கப்படவும், போதைப் பொருட்களினால் மன ரீதியாகவும், உடல் ரீதியாகவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு சுகம் உண்டாகவும், அடிமையாயிருக்கிறவர்களுக்கு திடீர் மரணங்கள் உண்டாகி விடாதபடிக்குக் கர்த்தர் அவர்களைக் காக்கவும், அவர்கள் இரட்சிக்கப்படவும் ஜெபிப்போம்.

**2** போதைப் பழக்கத்திற்கு அடிமையானவர்களால் அவர்கள் குடும்பத்துக்கும், சமுதாயத்துக்கும் எந்த வித பாதிப்புகள் உண்டாகாமலிருக்கவும், அசுத்தங்களும் கொலைகளும் நடக்காமலிருக்க, அவர்கள் நிமித்தம் தேசத்திற்கு சாபம் உண்டாகாதபடி தேவன் மன்னிக்கவும், போதைப் பொருட்களை உற்பத்தி செய்கிற நாடுகளில் அரசாங்கம் தடை செய்யவும், உலகளவில் போதைப் பொருட்கள் கடத்தி, விற்பனை செய்தல் தடுக்கப்படவும் ஜெபிப்போம்.

## துணுக்குச் செய்திகள்




**இயேசு குழந்தையாக இருந்தபோது யோசேப்பும், மரியாளும் அவரை எடுத்துக்கொண்டு எகிப்திற்கு ஓடிப்போனதாக வாசிக்கிறோம் அல்லவா? ஆனால், எகிப்தில் எங்கே அவர்கள் குடியிருந்தார்கள் என்று உங்களுக்கு தெரியுமா? எகிப்திலுள்ள ஈலியாப்பொலீன் என்ற இடத்தில்தான் குடியிருந்தனர். காரணம், எகிப்தில் அக்காலத்தில் யூதர்களின் மிகப்பெரிய குடியிருப்பு இந்த ஈலியாப்பொலீன் என்ற கிராமத்தில்தான் இருந்தது. இந்த இடத்திற்கு ஓன் என்றும் பெயர் உண்டு.**

முன்பதிவு செய்கிறவர்கள்
மட்டுமே அனுமதிக்கப்படுவர்

நவம்பர்
**8**
2025

இயேசுவின் தொனி ஊழியங்கள்
நடத்தும்

# தீர்க்கதரிசன
# உபவாச ஜெபம்



**இடம்**
இயேசுவின் தொனி
தீர்க்கதரிசன மையம்
இராமநாதபுரம்

**நேரம்**
9 am - 4 pm










இயேசுவின்
தொனியின்
**இலக்கிய**
**வெளியீடுகள்**

## ACCOUNT DETAILS

VINCENT SELVAKUMAR
A/C NO. 910010022737183
VOICE OF JESUS MINISTRIES
A/C NO. 910010023338787

காணிக்கை செலுத்த
விரும்புவோர் கவனத்திற்கு..

BANK : AXIS BANK, RAMNAD BR
IFS CODE : UTIB 0001080
SWIFT CODE : AXIS IN BB 109

SCAN FOR

## FOR CONTACT

(+91) 9788 404 333
(+91) 9731 722 977